# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 8 (LW12) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி.சிவபிரியா | வட்டம் | - | |
| க/பெ | - | | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 05.02.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

### முதல் விசாரணை

நான் தற்போது தமிழ்நாடு மின்சார உற்பத்தி பகிர்மான பிரிவில் அனந்தபுரத்தில் உதவி மின்பொறியாளராக பணிபுரிகிறேன். கடந்த 26.10.2020ம் தேதி மேற்படி அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள துத்திப்பட்டு கிராமத்தில் மின்இணைப்பு எண்.495-023-860 விகிதப்பட்டியல் எண்.III-A1 இணைப்பில் வைக்கப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி குப்பன் த/பெ.காசிநாதன் என்பவர் இறந்தது சம்மந்தமாக தகவல் தெரிந்து, அனந்தபுரம் காவல் ஆய்வாளர் வேண்டுகோளின் பேரில் 27.10.2020ல் நான் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தேன். மேலும் மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யுமாறு கேட்டு காவல் ஆய்வாளருக்கு விண்ணப்பம் கொடுத்தேன். மேற்படி 27.10.2020 தேதியிட்ட விண்ணப்பம் (மாதிரி வரைபடம் இணைக்கப்பட்டது) அதசாஆ.7 ஆகும்.

மேலும் காவல் ஆய்வாளரின் 01.12.2020 தேதியிட்ட மனுவில் கேட்டுக்கொண்டது படி மின்விபத்து நடைபெற்ற இடத்தின் மின் இணைப்பு எண், அதன் உரிமையாளர் பெயர் மற்றும் மின்இணைப்பில் மின்விபத்து நடைபெற்ற

போது மின்அளவீடு கணக்கிட முடியாது என்றும் விவரங்கள் தெரிவித்து அறிக்கை ஒன்றினை 08.12.2020 தேதியிட்டு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பினேன். அந்த அறிக்கை அதசாஆ.8 ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

மின்விபத்து சம்மந்தமாக எனக்கு தகவல் எப்போது தெரிந்தது என்றால் 27.10.2020 தேதியன்று பொதுமக்கள் அளித்த தகவல் படி தெரிந்தது. தகவல் தெரிவித்த நபர் பெயர் தெரியுமா என்றால் ஒரு நபர் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார், அவர் பெயர் தெரியவில்லை. இந்த விபரத்தை போலிசார் விசாரித்த போது கூறினேனா என்றால் கூறினேன்.

மறுவிசாரணை இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 9 (LW13) வாக்குமூலம்

### சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | திரு.வெங்கடேசன் | வட்டம் | - | |
| த/பெ | - | | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 05.02.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர்.)

### முதல் விசாரணை

நான் தற்போது கஞ்சனூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 27.10.2020ல் அனந்தபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண்.1696/2019 வழக்கில் மின்வேலியில் சிக்கி இறந்துபோன குப்பன் த/பெ.காசிநாதன் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்து பிரேத பரிசோதனை முடிந்த பிறகு அவரது உறவினர் வசம் ஒப்படைத்து அது சம்மந்தமாக அறிக்கை தாக்கல் செய்தேன். ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.